

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகர திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் இளைஞர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி திருநின்றவூர் நகர செயலாளர் தி.வை. ரவி, ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி.சாமு.நாசர், கலந்துகொண்டு பெண்களுக்கு கிப்ட் பாக்ஸ் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறைபுரையாற்றினார். உடன் ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை கழக பேச்சாளர்கள் சிவாஜிகிருஷ்ணமூர்த்தி, கா.ராஜேஸ்வரி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, நிவேதாஜெசிக்கா, ம.ராஜி, எஸ்.ஜெயபாலன், சன்பிரகாஷ், டி.தேசிங்கு, ஜி.நாராயண பிரசாத், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், கே.சுரேஷ்குமார், வி.தியாகராஜன், எம். மோகன், ஆர்.பிரவீன் குமார், உஷாராணிரவி, சி.கமலக்கண்ணன், ஆர்.ரவி, ச.பாபு, குணசேகரன், தங்கமணி, வி உஷாராணி, ராதா, சந்தோஷ்குமார், தி.வை.சுரேஷ்குமார், ஜெயக்குமார், பி.எல். ஆர். யோவானந்தன், பிரசன்னா, ஆறுமுக ராஜா, பி.கே.சந்தோஷ் குமார், பூங்கொடி, சுஜாதா, கே.சதீஷ், மித்ரா தேவி, செல்வநம்பி, பால்ராஜ், சுரேஷ், வெங்கடேசன், ராஜன், மகாதேவன், மகேஷ் குமார், மேகநாதன், பிரகாஷ், கருணாநிதி, முரளி, பாஸ்கரன், செந்தில்குமார், சுகுமார், சதீஷ்குமார், பாபு, ராஜராஜன்,கிருஷ்ணன், டி.மூர்த்தி, பரமசிவம், வாணிஸ்ரீ, நந்தகுமார், ஆர்.ஸ்ரீவாக், ஸ்ரீ வாட்சன், பட்டாணி கார்த்திக், துரையரசன், கோமேஷ் குமார், சுபாஷ், மனோஜ், சந்திரன், சலீம், கோடீஸ்வரன், அசோக்குமார் தங்கராஜ், மோகன கிருஷ்ணன், உள்பட பலர் உள்ளனர்.

## வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில்

# சூரிய மின்நிலையம், அதிநவீன 7D திரையங்கம்!

## வனத்துறை அமைச்சர் க.பொன்முடி திறந்து வைத்தார்!

சென்னை,டிச.19-

வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி அவர்கள் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 'நீலகிரி வரையாடு எண் முத்திரை மற்றும் நீலகிரி வரையாடு அறிக்கை 2024" முதல் ஒத்தசைக்கப்பட்ட கணக்கெடுப்பை வெளியிட்டு சூரிய மின்நிலையம் மற்றும் அதிநவீன 7டி திரையங்கம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி அவர்கள் தலைமையில் இன்று (18.12.2024) அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 'நீலகிரி வரையாடு எண் முத்திரை மற்றும் நீலகிரி வரையாடு அறிக்கை 2024" முதல் ஒத்தசைக்கப்பட்ட கணக்கெடுப்பை வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்டு வனத்துறை அமைச்சர் அவர்கள் சூரிய மின்நிலையம் மற்றும் அதிநவீன 7டி திரையங்கம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழக முதல்வர் அவர்கள் வனவிலங்குகளுடைய பாதுகாப்பு கருதி வனத்துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்து அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். நீலகிரி வரையாடு திட்டத்தை நமது மாநிலத்தில் சிறப்பு திட்டமாக அக்டோபர் 2023ல் முதல்வர் அவர்கள் அறிவித்தார்.அதன் அடிப்படையில் தான் அதற்கான ளுவயஅி கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது. 2023ல் 1031 வரையாடு தமிழ்நாட்டில் கணக்கிடப்பட்டது. தமிழ்நாடு மற்றும் கேரளா எல்லைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 1858 கணக்கெடுக்கப்பட்டது. இயற்கை வளத்தை பாது காக்கவேண்டும்.

வனவிலங்குகளை பாது காக்க வேண்டும் என்பதற்காக இந்த நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சிறப்பான திட்டங்கள் ஒன்று தான் இத்திட்டம். பசுமையான மற்றும் நிலையான உயிரியல் பூங்காவில் ஊக்குவிக்கும் வகையில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வெவ்வெறு இடங்களில் 180 கிலோ வாட் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதன் மூலம் குறிப்பிடத்தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. உயிரியல் பூங்காவில் மொத்த தேவை ஆற்றல் 250 கிலோ வாட் மற்றும் உயிரியல் பூங்காவில் சராசரி உச்ச தேவை 212 கிலோ வாட் ஆகும். இந்த சுற்றுச்சூழல் நட்பு வசதியானது உயிரியல் பூங்காவில் 85 விழுக்காடு மின் தேவையை பூர்த்தி செய்யும் மற்றும் சோலார் மூலம் மீதமுள்ள ஆற்றல் தேவை விரைவில் நிறுவப்படும். இது கார்பன் அளவு குறைத்து உயிரியல் பூங்காவில் செம்மைப்படுத்தும் இம் முயற்சியானது 85 விழுக்காடு அதிகமான சூரிய மின் சக்தியை நுகர்வுக்காக நிறுவிய முதல் உயிரியல் பூங்கா இதுவாகும்.

இங்கு பார்வையிடப்பட்ட அதிநவீன 7னு திரையங்கம் வனத்தில் இருப்பது போலவே வடிவமைக்கப்பட்டுள்ளது. பொழுதுபோக்குடன் கல்வி வழங்குவதன் மூலம் பார்வையாளர்கள் அனுபவத்தை மேம்படுத்தும் இத்திட்டம் TANII திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது. தியேட்டர் 32 இருக்கைகள் திறன் கொண்டது. நல்ல ஒலி, வீடியோ மற்றும் சிறப்பு அம்சங்களுடன் கூடிய இந்த தியேட்டர் பார்வையாளர்கள் அனைவருக்கும் ஈர்க்கக்கூடிய மற்றும் ஊடாடும் கற்றல் அனுபவத்தை வழங்குகிறது.

சன் டிவி நிறுவனம் பலகோடி மதிப்பீட்டில், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை சுற்றி பார்க்க பயன்படுத்தப்பட்டு வரும் 10 வாகனங்கள், இரண்டு பேருந்துகள், இரவாடி விலங்கு கூடம், பல்வேறு பறவைகள் தங்ககூடிய வேடத்தாங்கல் பறவைகள் கூடம் முதலானவற்றை வனத்துறைக்கு அமைத்து கொடுத்த சன்டிவி நிறுவனத்திற்கு வனத்துறை மூலம் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு வனத்துறை அமைச்சர் க.பொன்முடி தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர்.ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாது காவலர், (வனத்துறைத்தலைவர்) சீனிவாஸ் ரா.ரெட்டி, மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரினகாப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, மற்றும் வனத்துறை உயர்அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பெஞ்ஜல் பாதிப்புக்கு நிதிஉதவி வேண்டும்!

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்

புதுடெல்லி, டிச. 19-

தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் நாடாளுமன்றத்தில் , நேரமில்லா நேரத்தில் பேசியதாவது:



பெஞ்ஜல் புயல் தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. உட்கட்டமைப்பு, மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அன்றாட வாழ்க்கையை சீர்குலைத்துள்ளது. தமிழக அரசு விரைந்து செயல்பட்டு கடலூர்சித்தூர் சாலை மற்றும் திருவண்ணாமலை பைபாஸ் ரோடு போன்ற முக்கியமான சாலைகளை சீரமைக்க 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்களையும், பல உதவி பொறியாளர்களையும் ஈடுபடுத்தியுள்ளது. மேலும், நகராட்சி அதிகாரிகள் குடிமைப்பிரச்சினைகளை தீவிரமாகக் கவனித்துள்ளனர். ரூ.37.79 கோடி மதிப்பிலான நலத்திட்டங்கள் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளன. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு அவர்களின் நிதி சுதந்திரத்தை உயர்த்துவதற்காக ரூ.30 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட ரூ.944 கோடி புயல் நிவாரண நிதியானது, கடந்த நிதியாண்டில் அதிக நேரடி வரி செலுத்திய மாநிலங்களில் 3வது மாநிலமான தமிழ்நாட்டுக்கு மிகவும் குறைவு.

மக்களின் நீண்டகால மறுவாழ்வுக்கான ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து உடனடியாக இடைக்கால நிவாரணமாக ரூ.2,000 கோடி வழங்க வேண்டும் என்று பிரதமரிடம் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இது மீட்பு, மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு செயல்முறைகளை விரைவுபடுத்த உதவும்.

எனவே, மத்திய அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் முழுவதும் சேதத்தின் அளவை துல்லியமாக அளவிடுவதற்கு அர்ப்பணிப்புள்ள மத்தியக்குழுவின் விரிவான மதிப்பீடு முக்கியமானது. பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளுக்கு வழங்கப்படும் உதவிகளை இது உறுதி செய்யும்.

விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமூகங்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு நீண்டகால மறுவாழ்வுத் திட்டத்தை வடிவமைப்பதில் தமிழக அரசுக்கு உதவுமாறு மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# சேப்பாக்கம் 63 'அ' வட்டத்தில் நல உதவிகள்! பொதுக்கூட்டம்!

### சிவாஜி கிருஷ்ணமூர்த்தி – தயாநிதிமாறன் எம்.பி. – மு.க.தமிழரசு – நே.சிற்றரசு – ஜோதி சிறப்புரை!

சென்னை, டிச. 19 -

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி 63 அ வட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி நல உதவிகள், பொதுக்கூட்டம், இன்று (19.12.2024) மாலை 6 மணியளவில் கோபால்தாஸ் ரோடு (மிட்லாண்ட் பின்புறம்) வட்டச் செயலாளர் மு.சின்னராஜ் தலைமையில் நடைபெறுகிறது. பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் வரவேற்றுப் பேசுகிறார்.

என்.செல்வம், ஏ.ஜஹாங்கீர்,. டி.ஆயூப்கான், ஜி. வேதாசலம், எஸ்.மதன், ஏ.அருண், என்.ரிஷ்வான் ஷெரீப், டி.பீர்முகமது, ஜி.பிரபு, சி.சாது, என்.குமரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நலத்திட்ட உதவிகளை வழங்கி ,தயாநிதிமாறன் எம்.பி., மு.க.தமிழரசு, நே.சிற்றரசு, சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, ஜோதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்

பார்டர் தோட்டம் ஈ. எஸ்.ராஜ், தொப்பளான் டி. குமார், பி.லட்சுமிபாரதி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் ஒன்றியம், ஏனம்பாக்கம் ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலக் குழு மாவட்ட அமைப்பாளர் ஏனம்பாக்கம் கா.சம்பத் ஏற்பாட்டில் துணை முதல்வர் – கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களை மாவட்ட கழக செயலாளரும் கும்முப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். நிகழ்ச்சியில் எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், வெற்றி(ஏ) ராஜேஷ், வி.பி.ரவிக்குமார், என்.அருள், சந்துரு, டி.கே.பழனி, ஏ.சீனிவாசன், என்.ரவிசந்தரன் சிவசங்கர் டி.ரவி, டில்லிசங்கர், இரா.அப்புன், வி.சுகன்யர், இ.ஜி.பார்த்திபன், எல்லாபுரம் கே.ராஜேஷ், கே.வி. நாகராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. செமி-கண்டக்டர் உற்பத்தி அலகுகளை தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும்!**

**கனிமொழி கருணாநிதி!**



நாடாளுமன்ற மக்களவையில் திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவரான கனிமொழி கருணாநிதி, விதி எண் 377 இன் கீழ் முக்கிய பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

அவர் பேசியதாவது,

"மின்னணுத் துறையில் செமி கண்டக்டர் உற்பத்தி என்கிற மிக முக்கியமான விவகாரம் பற்றியும், அதில் தமிழ்நாட்டின் முக்கியப் பங்கு பற்றியும் ஒன்றிய அரசின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

உலக அளவில் செமி கண்டக்டர் சிப்ஸ் இறக்குமதி செய்யும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த இறக்குமதி 92% அதிகரித்துள்ளது.

செமி கண்டக்டர் உற்பத்தியில் தன்னிறைவு நோக்கிய முன்னேற்றங்கள் இருந்தபோதிலும் சமீபத்தில் ஒன்றிய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 3 செமி கண்டக்டர் உற்பத்தி அலகுகளில் ஒன்று கூட இத்துறையில் ஆற்றல் மிக்க தென் மாநிலங்களுக்கு வழங்கப்படவில்லை என்பது ஏமாற்றம் அளிக்கிறது.

2023-24 காலகட்டத்தில் இந்தியாவின் மின்னணு சாதன மொத்த ஏற்றுமதியில், 40% தமிழ்நாட்டின் பங்களிப்பாக இருக்கிறது. இதில் உலகத்தரம் வாய்ந்த செமி கண்டக்டர் வடிவமைப்பு நிறுவனங்கள், மின்னணு சாதன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் உட்பட்டவையாகும்.

மேலும், தமிழ்நாட்டின் 100க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் விஎல் எஸ்ஐ (VLSI) மற்றும் நானோ தொழில்நுட்பத்தில் சிறப்பு படிப்புகளை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் இருந்து ஆண்டுதோறும், 1.13 லட்சம் இளைஞர்கள் டிப்ளோமா மற்றும் பாலிடெக்னிக் நிறுவனங்களில் பட்டம் பெறுகிறார்கள்,

மேலும் ஒவ்வொரு ஆண்டும் 494 ஐடிஐகள் செமிகண்டக்டர் தொழிலுக்குத் தேவையான வகையில் 700 படிப்புகளை வழங்குகின்றன.

தமிழ்நாட்டின் மேம்பட்ட தொழில் சூழல் மற்றும் திறமையான தொழிலாளர்கள் இந்தியாவின் செமிகண்டக்டர் துறையில் இலக்குகளை விரைந்து எட்டுவதற்கு தங்கள் தனித்துவமான பங்கை வழங்கி வருகின்றனர்.

எனவே இந்தத் துறையில் புதுமை மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்க, செமி கண்டக்டர் உற்பத்தி அலகுகளை தமிழ்நாட்டுக்கு வழங்கிட ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்"

**2. வானிலை அறிவிப்பு தொழில் நுட்பத்தை மேம்படுத்துக!**

**தயாநிதி மாறன்!**

தமிழ்நாடு கடற்கரையோரங்களில் வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என மத்திய சென்னை திமுக எம்.பி. தயாநிதி மாறன் மக்களவையில் கோரிக்கை வைத்துள்ளார்.



மேலும் அவர் தனது அறிக்கையில் தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில் தற்போது செயல்பாட்டில் உள்ள வானிலை முன்னறிவிப்பு நிலையங்கள் எத்தனை, கன்னியாகுமரி உள்ளிட்ட தமிழ்நாடு கடற்கரையோர பகுதிகளில் கூடுதலாக வானிலை முன்னறிவிப்பு வசதிகளை அமைப்பதற்கான திட்டங்கள் மற்றும் அவை அமைப்பதற்காக நிர்ணயம் செய்திருக்கும் கால இலக்குகள், நாடு முழுவதும் புதிதாக 56 டாப்ளர் ரேடார்களை நிறுவுவதாக முன்மொழியப்பட்ட திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் சென்னை முதல் கன்னியாகுமரி வரையுள்ள கரையோரங்களில் எந்தெந்த பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, தமிழ்நாட்டில் வானிலை முன்னறிவிப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்த பட்ஜெட் ஒதுக்கீடுகள் போன்ற விவரங்கள் உள்ளடக்கிய விரிவான அறிக்கை வெளியிட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

**3. வீடுகளுக்கு குறைந்த விலையில் சூரிய மின்தகடு**கள்

**எஸ். ஜெகத்ரட்சகன்!**



நாடு முழுவதும் சூரிய ஒளி மின்சாரத்தை முதன்மை மின்சார ஆதாரமாக பயன்படுத்துவது எனும் இலக்கிற்கேற்ப தொழிற்சாலைகள், தனியார் கட்டிடங்கள் மற்றும் வீடுகளில் சூரிய மின் தகடுகள் பொருத்துவதற்கு ஒன்றிய அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து அரக்கோணம் திமுக எம்.பி. எஸ். ஜகத்ரட்சகன் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொழிற்சாலை சார்ந்த மின்சார பயன்பாட்டிற்கான கட்டமைப்புகளை தற்போதுள்ளதைவிட குறைந்த செலவில் உருவாக்கும் திட்டங்கள் குறித்தும் அவர் விவரங்கள் கேட்டுள்ளார்.

**4. விவசாய ஆலோசனை சேவைகள் - தனியார்மயமாக்கலை தவிர்த்திடு**க

**தமிழச்சி தங்கபாண்டியன்!**



நாட்டின் விவசாய ஆலோசனை சேவைகளின் தற்போதைய நிலை குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார் தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன்.

நிதி ஆயோக் பரிந்துரையின்படி மாவட்ட வேளாண் வானிலை ஆய்வு அலகுகளை (DAMUs) தனியார்மயமாக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா என்றும் அப்படியென்றால், அரசு இம்முடிவெடுப்பதற்காக மேற்கொண்ட ஆய்வுகள் அல்லது தரவுகளின் விவரங்களை வெளியிட வேண்டும் என கேட்டுள்ளார். அரசின் தனியார்மயமாக்கும் முடிவால் சிறு விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்படுவது குறித்து கவலை தெரிவித்த அவர், அது குறித்து ஒன்றிய அரசு ஆய்வுகள் மேற்கொண்டிருந்தால் அதன் விவரங்களையும் வெளியிடவேண்டும் என கோரியுள்ளார்.

**5. தமிழ்நாடு முழுவதும் தண்டவாளங்களை மேம்படுத்த வேண்டும்!**

**எம். எஸ். தரணிவேந்தன்!**



தமிழ்நாட்டில் இரயில்களின் வேகத்தை அதிகப்படுத்துவதற்கு தண்டவாலங்களை மேம்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்களவையில் ஆரணி திமுக எம்.பி. எம். எஸ். தரணிவேந்தன் கோரிக்கை வைத்துள்ளார்.

கடந்த மூன்றாண்டுகளில் வழித்தட மேம்பாடு மற்றும் அதன் பாதுகாப்பை மேம்படுத்துதல், வேகத்தை அதிகப்படுத்தும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட நிதித்தொகை திட்டங்களை முடிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால இலக்கு ஆகியவற்றையும் அறிவிக்குமாறு அவர் கோரியுள்ளார். அதேபோல் ஒன்றிய அரசு அரசு மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து இத்திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்றும் திட்டங்களின் நிலையை அவ்வப்போது கண்காணித்து பொதுமக்களுக்கு அறிக்கை வெளியிடுவதற்கான வழிமுறைகளையும் ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

**6. சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்தி முறைகளை கடைப்பிடிக்க நடவடிக்கை என்ன?**

**எம். எம். அப்துல்லா!**



குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்தி முறைகளை கடைப்பிடித்திட ஒன்றிய அரசு ஆதரவளிக்கிறதா? என்றும் இத்தகைய முயற்சிக்கு உறுதுணையாக இருப்பதற்கு தனித்துவமான ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு மையங்களை நிறுவ ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை வைத்திருக்கிறதா? என்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான சந்தை பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் எம். எம். அப்துல்லா மாநிலங்களவையில் கேள்விகளை எழுப்பினார்.

## வீ.மதிவாணன் தலைமையில் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

# சைதை 132 அ வட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டம்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்கினார்!

சென்னை, டிச. 19-

சைதை மேற்கு பகுதி 139 வது வட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு தெருமுனை கூட்டம் மற்றும் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, 17.12.2024.அன்று செவ்வாய்க்கிழமை மாலை. 6.00 மணியளவில். முத்துரங்கம் பிளாக்,மாணிக்கம் தெருவில் மாவட்ட பிரதிநிதி வீ.மதிவாணன். .தலைமையில் பகுதி செயலாளர் .எம். கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர். எம். ஸ்ரீதரன்.எம்.சி. சைதை மா.அன்பரசன், களக்காடி.எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், வட்டச் செயலாளர்கள் அட்கோ.கமலநாதன், சை.மு. சேகர். ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஜி.கே.ராமசந்திரன், மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்தி சுந்தரம், ஆர். வி.நகர். அ.அயாத்பாஷா ஆகியோர் வரவேற்றனர்.

மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் 1000 பேருக்கு பிளாஸ்டிக் டப் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் கழக பேச்சாளர்கள் சேலம்.சுஜாதா, ந.காருண்யா, ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் சைதை . எஸ்.குணசேகரன், பரிதி இளம் சுருதி.எம்.சி. சைதை.த.சம்பத்,ந. தமிழரசு, எஸ்.பி.கோதண்டன், நா.மணிகண்டன், ஆர்.கிருஷ்ணகுமார், டி.என்.சிவமணி, கு.புகழ்வேந்தன், ஆர்.ரவி பால்கார். ஏ.ரவி, இரா.சத்யா, ம.சுகுமார், க.தீபன், வெ. புருசோத்தமன், த.மணி, என். தீனதயாளன், சார்பி.சரவணன், ஆ.சுப்பிரமணியன், சி.டி.காசிநாதன், வி.சுபரி, து.முரளி, எல்.சந்திரன், ஜி.ஏழுமலை, கொடி. து.சுரேஷ்பாபு, ஆர்.தண்டபாணி, ஜி.கங்காதரன், விஜபி. சுரேஷ், சு.நித்தியானந்தன், காரைக்குடி.செல்வம், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என். ரமேஷ்,எஸ்.கண்ணன், ஆர். தாமோதரன், சி.மங்கையர்திலகம், து.வினோத்ததுளசிங்கம், பி.டி. சி.ரவி, ஆர்.அருண் பாபு எல்லப்பன், ஜெ.கெவின், வ.ராஜா, துளசி சந்திரசேகர், இ.வ.ரகுபதி, ஆட்டோ.சேகர், த.சேகர், ம.திலீபன், கே.கோபி, எம். அருண், மு.காளியப்பன், சி.ஆறுமுகம், வி.பி.சிவகுமார், ஆயில்.எம்.சரவணன், கா. மூர்த்தி, து.மா.பொ.சி, ப.தினகரன், மைக்கேல்ராஜ், மு.கோபி, காரோட்டி கண்ணன், எஸ்.முருகன், ப.மோகன், பா.செல்லபாண்டியன் ஆர்.காசி ,எம். மகேந்திரன், எஸ்.காந்தி, சி.செந்தில், பி.அன்பழகன், பி.ஜெயசூர்யா, பன்னீர்செல்வம், அம்மாசி, எஸ்.ரவி,டி.பாபு, வெங்கடாசலம், லோகநாதன், ராஜா,சடகோபன், எஸ்.மகேஷ் பாபு,எஸ்.பரத், கார்த்திக் ராஜா, ஆர்.அசோக்,த.கணேஷ், சைதை.எல்.மணி,அஜித், ரஞ்சித் குமார், பரத்குமார், விஜய் குமார், விக்னேஷ், கணேஷ்,பரணி,யோகேஷ், அஜய்,அஸ்வித்,சந்தோஷ் எம் குமரன், ஏ.ஆதாஷ் ஆர்.ஜெய்ஆகாஷ், கிஷோர்,ஏ கோபிநாத் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஆர்.தண்டபாணி, ஆர். கண்ணன், எம்.கஜேந்திரன், பில்டர்.செல்வம், எம்.தன்ராஜ் ஆகியோர் நன்றி கூறினர்.



சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர், ந.ம.மகேஷ்குமார் ஏற்பாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 1048 நபர்களுக்கு அசைவ உணவு விருந்து தலைமை செயற்குழு உறுப்பினர் உடசென்னை ந.மனோகரன் முன்னிலையில் நடைபெற்றது. சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இதில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா. மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், தா.இளைய அருணா, பி.டி. பாண்டி செல்லம், பகுதி கழக செயலாளர்கள், வ.பெ.சுரேஷ் இரா.செந்தில்குமார், மாவட்ட கழக நிர்வாகிகள், மு. கோபி, க.நாகம்மை. பொதுகுழு உறுப்பினர்கள், வே.சிவகுமார், கி. ராஜேந்திரன், நா. சண்முகம். பகுதி கழக நிர்வாகிகள், எம். கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், இ.மதன், வி.மலையம்மாள், வட்ட கழக செயலாளர்கள் இரா. பாலன், எம்,எல்,ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன்,ஜெ.கௌரீஸ்வரன், பாலாலட்சுமி, கிழக்கு பகுதி நிர்வாகிகள், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், க.கலைசெல்வன், பெ.கண்ணன், என்.கிருஷ்ணன், மு. கோவிந்தராஜ், ஜி.சதிஸ்குமார், மாமன்ற உறுப்பினர், பா. வேளாங்கன்னி, ந.குமார், மாவட்ட பிரிதிநிதிகள் இரா. பொன்முடி, எஸ்.யுவராஜ், மோ.ரவிக்குமார், பிரசிடென்சி சி. சதிஷ், நீ.எழிலராசன், எம்.பாலாஜி, எம். பாலசுப்பிரமணியன், ஆர்.டி.ஜெய்சங்கர், வி. குமார் அக்தோ. பி.முனுசாமி, பகுதி துணை அமைப்பாளர், கு.பிரவின்குமார் நன்றியுரை கூறினர்.